Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 02, 2025

செவ்வாய்க்கிழமை 02, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர் 041 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE









ஆப்கான் நிலநடுக்கத்தில்

# 800 பேர் பலி; 4,800+ காயம்

கிழக்கு ஆப்கானிஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை (31) இரவு 11.47 மணிக்கு 6.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதில் 800க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 4,800க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த நிலநடுக்கம் 6.0 ரிக்டர் அளவான ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஜலாலாபாத்திலிருந்து கிழக்கு-வடகிழக்கே 27 கிலோமீட்டர் தொலைவில், 8 கிலோமீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. 20 நிமிடங்களுக்கு பிறகு, மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. 10 கிலோமீட்டர் ஆழத்தில் 4.5 ரிக்டர் அளவில் பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால், 800க்கும் மேட்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் 4,800க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். நிலநடுக்கதால் வீடுகள் இடிந்து உள்ளன. இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதியின் பெயர் இல்லை





குடிவரவு- குடியல்வு திணைக்களத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவால் திங்கட்கிழமை (01) அன்று திறந்து வைக்கப்பட்டது.

நினைவுக்கல்லில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் பெயர் பொறிக்கப்படவில்லை.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பொதுமக்களது நிதியை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

வடக்கில் விடுவிக்கக்கூடிய

# "அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும்"

**நாட்டைச் சுற்றியுள்ள கடல், தீவுகள் மற்றும் காணிகளை மக்களுக்காகப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்**


கடந்த போரின் போது பாதுகாப்பு படையினரின் பயன்பாட்டிற்காகக் கையகப்படுத்தப்பட்ட வடக்கில் விடுவிக்கக்கூடிய அனைத்து காணிகளும் மக்களுக்காக விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மீனவ சமூகத்திற்குத் தேவையான வசதிகளை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும், வடக்கில் மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் மீனவ சமூகத்திற்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# ஒரே வீட்டுக்குள் 2 சடலங்கள் மீட்பு



பசறை, தஹா கனாவா பகுதியில் உள்ள வீட ஒன்றுக்குள் திங்கட்கிழமை (01) அன்று இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பசறை, தஹா கனாவா பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இரண்டு உடல்கள் இருப்பதாக அவசர அம்பியூலன்ஸ் சேவைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையின் போது, இரண்டு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரே வீட்டில் இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் குறித்து பொலிஸார் விரிவான விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

மயிலிட்டியில் பொலிஸார் அடாவடி:

# தூஷணத்தால் திட்டி முதுகில் பிடித்து தள்ளினர்



■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் மயிலிட்டி பகுதியில் திங்கட்கிழமை(01) காலை ஒன்றுகூடிய காணி உரிமையாளர்களையும் அதனை செய்தி சேகரித்த ஊடகவியலாளர்களையும் பொலிஸார் விரட்டியடித்தனர்.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் பகுதியில் அபிவிருத்தி பணிக்கான அடிக்கலை நாட்டுவதற்காக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வருகைதந்தார்.

இதன்போது, அப்பகுதியில் கூடியிருந்த, காணி உரிமையாளர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என அனைவரும் அப்பகுதியில் நிற்க விடாமல் விரட்டியடிக்கப்பட்டனர்.

வயோதிபர்கள் எனவும் பாராது தூஷண வார்த்தைகளால் ஏசி பொலிஸார், முதுகில் பிடித்து தள்ளினர். பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு கடும் பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மயிலிட்டிக்கு வருகை தந்திருந்தார்.

தொடர்ச்சி P2

# "ஏமாற்றி, பொய்யால் வெற்றி பெற்றனர்"



நம் நாட்டின் நிலைமை சோகமானதும் துரதிர்ஷ்டவ சமானதுமாகவே இன்று காணப்படுகின்றன. நாட்டு மக்களுக்குப் பல எதிர்பார்ப்புகளை வழங்கி, மக்களை ஏமாற்றி, பொய்யால் வெற்றி பெற்று, இன்று நாட்டின் 2.2 மில்லியன் மக்களை விரக்தியில் ஆழ்த்தியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இவ்விருவரையும் உங்களுக்குத் தெரியுமா?





வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஒரு பெண்ணிடம் ரூ.3 மில்லியன் மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரான பெண்ணையும், கூர்மையான ஆயுதத்தால் பெண்ணின் கழுத்தை அறுத்து கொலை செய்த சந்தேக நபரையும் கைது செய்ய பொலிஸ் தலைமையகம் பொதுமக்களின் உதவி கோருகிறது.

சந்தேக நபர் தங்களிடம் ரூ.3 மில்லியன் மோசடி செய்ததாக 5 பெண்கள் றக்வானை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய றக்வானை பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

அதன்படி, றக்வானை, பொதுப்பிட்டிய, கனடகம பகுதியைச் சேர்ந்த தலுகொட ஆராச்சிலகே ஹர்ஷனி பிரியந்திகா என்ற 40 வயதுடைய பெண்ணைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள், றக்வானை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை 071-859 1394 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொள்கிறது.

தொடர்ச்சி P2

# விமலுக்கு எதிரான வழக்குக்கு திகதி



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்த நாளில் நடைபெற்ற போராட்டத்தின் போது வீதிகளை மறித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் தேசிய சுதந்திர முன்னணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் ஆறு கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கை நவம்பர் 10ஆம் திகதி விசாரிக்க கொழும்பு

தொடர்ச்சி P2

ஸ்பாவுக்குள் நுழைந்து

# 3 அழகிகள் வன்புணர்வு: கான்ஸ்டபில் கைது

மசாஜ் நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்து, அங்கு பணிபுரியும் மூன்று பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு தப்பிச் சென்ற இரண்டு கான்ஸ்டபிள்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளையில் உள்ள மசாஜ் நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்து பெண் மேலாலர் மற்றும் நான்கு பெண்களை அச்சுறுத்தி, அதில் மூன்று பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர். பொலிஸ் சிறப்பு பணியக தலைமையகத்தில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர், அந்த மாடியில் இருந்து தப்பிச்செல்ல முற்பட்டபோது, மேல் மாடியிலிருந்து கீழே விழுந்து காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக பொரளை பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், அவர் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொழும்பு

தொடர்ச்சி P2

# எதிரணியின் புள்ளி விரைவில் கைது?

ஊழல் வழக்கு தொடர்பாக ஒரு சக்திவாய்ந்த எதிர்க்கட்சித் தலைவரும் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.


அவர் அமைச்சராக இருந்தபோது, சம்பந்தப்பட்ட அமைச்சகத்தின் ஊழியர்கள் குழுவை தனது தனிப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும், இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கெனவே நிறைய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பாக ஊழியர்கள் குழுவிடமிருந்து ஏற்கனவே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதையடுத்து, சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து

தொடர்ச்சி P2

# "தனக்கு உதவிய சகலருக்கும் நன்றி"



தான் கைது செய்யப்பட்டபோது, தனக்கு உதவிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றி எனத் திங்கட்கிழமை (01) அன்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது வீட்டிலிருந்து வீடியோ இணைப்பு மூலம் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு நன்றியை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, "நான் கைது செய்யப்பட்டபோது, என்னுடன் நின்ற அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாவது ஒரு நாள் உங்களைச் சந்திப்பேன் என்று நம்புகிறேன்" என்றார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போது மருத்துவ மேற்பார்வையில் வீட்டில் ஓய்வெடுத்து வருகின்ற நிலையில், மீண்டும் நன்றி கூறுகிறேன்" என்றார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும்”

யாழ்ப்பாணத்தில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் திங்கட்கிழமை (01) காலை கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை கூறினார்.

அத்துடன், கடந்த அரசாங்கங்கள் போரை எதிர்பார்த்து பணியாற்றிய போதிலும், இந்த நாட்டில் மீண்டும் எந்த விதமான யுத்தமும் ஏற்படாத வகையில் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப தற்போதைய அரசாங்கம் பாடுபடுவதாகவும், கடந்த போரின் போது பாதுகாப்பு படையினரின் பயன்பாட்டிற்காகக் கையகப்படுத்தப்பட்ட வடக்கில் விடுவிக்கக்கூடிய அனைத்து காணிகளும் மக்களுக்காக விடுவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். நாட்டைச் சுற்றியுள்ள கடல், தீவுகள் மற்றும் காணிகளை மக்களுக்காகப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும், அதில் எந்த விதமான அழுத்தத்திற்கும் இடமளிக்கப் படாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மயிலிட்டி மீன்பிடி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஜனாதிபதி அடையாள ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இதன் கீழ், வட மாகாணத்தில் உள்ள மீனவ சமூகம் மாத்திரமன்றி, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் இருந்து வரும் மீன்பிடி படகுகளுக்கும் நீர், மின்சாரம், எரிபொருள் போன்ற அத்தியாவசிய வசதிகள், குளிர்பதன சேமிப்பு வசதிகள், வலை தயாரிப்பு நிலைய வசதிகள், ஏலவிற்பனை மண்டப வசதிகள் மற்றும் தொடர்பாடல் பரிமாற்ற மைய வசதிகள் என்பனவும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு அரசாங்கம் 298 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

இந்த நிகழ்வில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் வட மாகாண அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதானிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# “ஏமாற்றி, பொய்யால் வெற்றி பெற்றனர்”

புற்றுநோய் வைத்தியசாலையில் நிலவும் வசதிகளைக் கூட பெற்றுக் கொடுக்கவோ, மருந்துப் பற்றாக்குறையைத் தீர்க்கவோ முடியாது போயுள்ளது. ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இதனால் மூளைசாலிகள் வெளியேற்றம் சார் பிரச்சினை எழுகிறது. இதற்கும் எந்த தீர்வும் இல்லை. மேலும், நாட்டின் அபிவிருத்திப் பயணத்தை விரைவுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொலைநோக்குப் பார்வை இல்லாத ஒரு அரசாங்கத்தால் நாடு ஆளப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியால் இம்முறை புதிதாகத் தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு அம்பாறை நகரில் ஞாயிற்றுக்கிழமை (31) அன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, பொருட்களின் விலைகள் அதிகரித்து, வருமானம் குறைந்து, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, மக்கள் நாட்டை விட்டு வெளியேறி வரும் சூழ்நிலையில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% பங்களித்து, சுமார் 4 மில்லியன் மக்களுக்கு வாழ்வாதரத்தைப் பெற்றுத் தரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் சொத்துக்கள் பராட்டே சட்டத்தின் மூலம் ஏலம் விடப்படுகின்றன.

அரிசியில் தன்னிறைவு பெற்றிருந்த ஒரு நாட்டில், தற்போது அரிசிக்கு நியாயமான விலை கூட இல்லாமல் இறக்குமதி செய்யும் நிலைக்கு நாடு சரிந்துள்ளது. நுகர்வோரைப் பாதுகாக்கிறோம் என்ற போலிக்காரணத்தின் கீழ் மோசடிகள் மேற்கொள்ளப்படுவதே இதற்குக் காரணம்.

இன்று, நெல் விவசாயிகள் முதல் சகல விவசாயத்திலும் ஈடுபட்டுள்ள மக்கள் கைவிடப்பட்டுள்ளனர். விவசாயிகளை கோலோச்சுவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த வினைதிறனற்ற அரசாங்கம், இன்று விவசாயிகளை நிர்க்கதிக்கு ஆக்கியுள்ளது.

இந்த மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளும் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்படவில்லை. ஜனாதிபதி பதவியையும், 159 பெரும்பான்மையையும், உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை அதிகாரத்தையும் வைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் நாட்டிற்காக எதையும் செய்யவில்லை. இது தொடர்ந்தால், 2022ஆம் ஆண்டு போலவே, நாடு கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் 2028 ஆம் ஆண்டிலும் மீண்டும் வங்குரோத்து நிலையை எட்டும்.

அத்துடன், 2028ஆம் ஆண்டு முதல் 5.5 பில்லியன் டொலர் வருடாந்த வெளிநாட்டுக் கடனை அடைக்க வேண்டுமானால் 2025 ஆம் ஆண்டு முதல் 5% பொருளாதார வளர்ச்சி விகிதத்தை பேணிச் செல்ல வேண்டும். புள்ளிவிவரங்களின்படி, இந்த இலக்கை தற்போது அடைய முடியாது. மீண்டும் வங்குரோத்துயடையக் கூடாது என பிரார்த்திக்கின்றேன். மக்களின் அழுத்தத்தையும் அதிருப்தியையும் சுரண்டி தனிப்பட்ட அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்கு நான் தயார் இல்லை. IMF உடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தத்தைத் திருத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டாலும், புதிய அரசாங்கமாக இந்த அரசாங்கம் அதனை செய்யவில்லை. நாட்டு மக்கள் இவற்றை புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# ஆசிரியர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போனார்

உடபுஸ்ஸல்லாவ பகுதியில் உள்ள ஒரு பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் குழு, ஞாயிற்றுக்கிழமை (31) மதியம் சுற்றுலா சென்று போபுருதிய நீர்வீழ்ச்சியின் கீழ் நீரோடையில் நீந்திக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக அம்பகஸ்டோவ பொலிஸார் தெரிவித்தனர்.

போபுஸ்ஸல்லாவ டாலோஸ் கல்லூரியில் கணிதம் கற்பித்து வந்த கே. முகில்தரன் (32) என்ற ஆசிரியர் நீரில் மூழ்கி காணாமல் போனதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர் ஒரு குழந்தையின் தந்தை ஆவார்.

பாடசாலையைச் சேர்ந்த எட்டு ஆசிரியர்கள் அடங்கி குழு ஒன்று போபுருடிய நீர்வீழ்ச்சியைப் பார்வையிட ஞாயிற்றுக்கிழமை (31) சுற்றுலா சென்றிருந்தது. அவர்கள் போபுருதிய நீர்வீழ்ச்சியின் கீழ் நீரோடையில் நீந்தச் சென்றிருந்தபோது, ஆசிரியர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போனதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பொலிஸின் உயிர்காக்கும் பிரிவு அதிகாரிகள், அம்பகஸ்டோவ காவல்துறையினர் மற்றும் உள்ளூர்வாசிகள் இணைந்து நீரில் மூழ்கிய ஆசிரியரைத் தேடும் பணியில் ஈடுபட்ட போதிலும், காணாமல் போன ஆசிரியரை ஞாயிற்றுக்கிழமை (31) இரவு வரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று பொலிஸார்தெரிவித்தனர்.

அப்பகுதியில் மிகவும் குளிராக இருந்ததாலும், வெளிச்சம் குறைவாக இருந்ததாலும் தேடும் பணி கடினமாக இருந்ததால், ஞாயிற்றுக்கிழமை (31) இரவு உடலைத் தேடும் பணி நிறுத்தப்பட்டதாகவும், காணாமல் போன ஆசிரியரைத் தேடும் பணி இன்று (1) காலை மீண்டும் தொடங்கப்பட்டது. எனினும், மேலதிக தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

# மண்டைத்தீவில் கிரிக்கெட் மைதானம்








யாழ்ப்பாணம் மண்டைதீவில் நிர்மாணிக்கப்படும் யாழ் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இன்று (01) ஆரம்பித்து வைக்கப்பட்டது

வடமாகாணத்தில் கிரிக்கெட்டின் மேம்பாட்டிற்கும், இளம் வீரர்களுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இந்த மைதானம் முக்கிய பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இம்மைதானம் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான வழிவகையை ஏற்படுத்தி, இலங்கையின் விளையாட்டுத் துறையில் புதிய கட்டத்தைத் தொடங்கவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து, நாடு முழுவதும் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காகவும், அனைத்துப் பகுதிகளிலும் உள்ள திறமையான வீரர்களுக்குச் சர்வதேசத் தரத்திலான வசதிகளை அளிப்பதற்கும் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 3 வருடங்களில் இங்கு சர்வதேச போட்டிகள் இடம்பெறும் என ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடதக்கது

இந்த ஆண்டு இறுதிக்குள், யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் முதல் போட்டி நடைபெறும் என்றும் முதல் சர்வதேச போட்டி 03 ஆண்டுகளுக்குள் நடைபெறும் என்று நம்பிக்கை தெரிவித்ததுடன், விளையாட்டில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எடுத்த இந்த நடவடிக்கையை பாராட்டினார்.

இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாமி சில்வா, விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ச.ஸ்ரீபவானந்தராஜா வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# தூஷணத்தால் திட்டி முதுகில் பிடித்து தள்ளினர்

கடந்த காலங்களில் ஜனநாயகம் பற்றி அதிகம் பேசிய அனுர குமார திசாநாயக்கவின் ஆட்சியிலும் பொலிஸார் கடந்த காலங்களை போன்று மூர்க்கத்தனமாக செயற்பட்டமை அங்கிருந்தவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியது.

# விமலுக்கு எதிரான வழக்குக்கு திகதி

பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம, திங்கட்கிழமை (01) உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உட்பட ஐந்து பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் ரேஅல் ஹுசைனின் இலங்கை வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 2016 பிப்ரவரி 6, அன்று தும்முல்ல மற்றும் பிற பகுதிகளில் ஐ.நா. அலுவலகத்திற்கு முன்பாக சாலைகளைத் தடுத்த போராட்டக்காரர்களுக்கு எதிராக கறுவாத்தோட்ட பொலிஸாரினால் வழக்குத் தொடரப்பட்டது.

# எதிரணியின் புள்ளி விரைவில் கைது?

வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட உள்ளன.

அவர் ஒரு அமைச்சகத்திற்கு பணம் செலவழித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதற்கிடையில், பல்வேறு ஊழல் வழக்குகளுக்காக இந்த ஆண்டு 10 அரசியல்வாதிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# இவ்விருவரையும் உங்களுக்குத் தெரியுமா?

படத்தில் இருக்கும் ஆண், மத்துகம, டோலஹேனவத்தே பகுதியில் கூர்மையான ஆயுதத்தால் ஒரு பெண்ணின் கழுத்தை ஏப்ரல் 18 ஆம் திகதி அறுத்த குற்றத்திற்காக தேடப்படும் 41 வயதுடைய பிராமணகே டான் சனத் ரவீந்திர நிலந்த ஆவார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் தற்போது அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுவிட்டார், அவரை கைது செய்ய விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் தொடர்பாக ஏதேனும் தகவல் தெரிந்தால், 071 859 1700 என்ற எண்ணில் மத்துகம உதவி பொலிஸ் கண்காணிப்பாளரை தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொள்கிறது.

# 800 பேர் பலி; 4,800+ காயம்

மேலும், கட்டடங்களின் இடிபாடுகளில் ஏராளமானோர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பல இடங்களில் வீதிகள், கட்டட இடிபாடுகளால் சூழப்பட்டிருப்பதால், மீட்புக் குழுவினர் நுழைய முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மருத்துவமனைகளுக்கு நூற்றுக்கணக்கானோர் காயங்களுடன் வந்து கொண்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதி வழியாக மருத்துவமனை கொண்டு வர முடியாதவர்களை வான் வழியில் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின், நகங்கர் மாகாணத்தில் ஜலாலாபாத்தை மையமாகக் கொண்டு ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கம், பாகிஸ்தான் மற்றும் புதுடெல்லி உட்பட வட இந்தியா முழுவதும் உணரப்பட்டது. கட்டடங்கள் குலுங்கின, இதனால் மக்கள் வெளியே விரைந்து சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# 3 அழகிகள் வன்புணர்வு: கான்ஸ்டபில் கைது

தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் சம்பவத்தில் தப்பியோடிய நபர், காவல்துறை சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட ஒரு கான்ஸ்டபிள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸ் மற்றும் கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வருகின்றன.

# இந்திய மீனவர்கள் நால்வருக்கு விளக்கமறியல் நீடிப்பு

நிதர்ஷன் வினோத்

எல்லை தாண்டி இலங்கையின் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் நால்வரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்களுக்கான விளக்கமறியல் ஏற்கனவே இரண்டு தடவைகள் நீடிக்கப்பட்ட நிலையில் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிரான வழக்கு, திங்கட்கிழமை (01) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவர்களின் விளக்கமறியல் உத்தரவு, நவம்பர் 11ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது,

## சிறுமிகள் வன்புணர்வு:

# இருவர் கர்ப்பம்; சிறுவர்கள் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் ஒரு வாரத்தில் 3 சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 13, 17 வயதுகளுடைய இரு சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாகவும் இரு சிறுவர்களை கைது செய்துள்ளதாகவும் அந்தந்த பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டத்திலுள்ள ஒரு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் வாந்தியெடுத்த 17 வயது சிறுமி ஒருவரை வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் 3 மாத கர்ப்பிணியாக இருப்பதை வைத்தியர்கள் கண்டறிந்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, குறித்த சிறுமியின் தாயார் தந்தை மீன்பிடி தொழிலுக்காக கடற்கரை பகுதியில் மீன் வாடியில் இருந்து வருவதாகவும் வீட்டில் குறித்த சிறுமியும் அவரது சகோதரரும் தங்கியிருந்து வருவதாகவும். கடந்த 3 மாதத்திற்கு முன்னர் சம்பவ தினம் குறித்த சிறுமி வீட்டிற்கு, இரவு வீதியால் நடந்து வரும்போது இருட்டில் வந்த ஒருவன் தன்னை இழுத்துச் சென்று வன்புணர்வு செய்ததாகவும் நபரை அடையாளம் தெரியாது எனவும் பொலிஸாரின் விசாரணையின்போது, தெரியவந்துள்ளதையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த அதே பொலிஸ் பிரிவில் 13 வயது சிறுமி ஒருவரை 3 மாத கர்ப்பிணியாக்கிய 17 வயது சிறுவன் ஒருவரை கைது செய்தனர். இதன்போது, கைது செய்யப்பட்ட சிறுவன் நான் இதற்கு காரணம் இல்லை எனது நண்பன் தான் இந்த சம்பவத்துக்கு காரணம் எனவும் தெரிவித்துள்ள நிலையில் குறித்த சிறுமி இல்லை இவன் தான் காரணம் என முறைப்பாட்டில் தெரிவித்ததையடுத்து கைது செய்யப்பட்ட சிறுவனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மாவட்டத்தில் உள்ள இன்னொரு பொலிஸ் நிலைய பிரிவின் கீழ் உள்ள பிரதேசம் ஒன்றில் 15 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 17 வயது சிறுவன் ஒருவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இவ்வாறு ஒரே வாரத்தில் 3 சிறுமிகள் மாவட்டத்தில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் இளைஞன் படுகாயம்

■ ஏ.எச்.ஹஸ்பர்



திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைச்சேனை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(31) மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிண்ணியா மாலிந்துரை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவனே படுகாயமடைந்து கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இரு மோட்டார் சைக்கிள்களிலும் நேருக்கு நேர் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளதுடன் இது தொடர்பான விசா கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஆலயத்தில் கைவரிசை காட்டிய பெண் சிக்கினார்



■ கனகராசா சரவணன், ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மண்டூர் முருகன் ஆலயத்தில் வைத்து பெண் ஒருவரின் பணப்பையைத் திருடிய சந்தேக நபர் ஞாயிற்றுக்கிழமை (31) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பெரிய போரதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மண்டூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் இடம்பெற்று வருகின்ற நிலையில் அங்கு ஆலயத் தரிசனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண் ஒருவரின் கைப்பை 20 ஆயிரம் ரூபாய் பணத்துடன் திருட்டு போயுள்ளது .

இது தொடர்பாக அங்கு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பணப்பையைத் திருடிய பெண்ணை ஆலய வளாகத்தில் வைத்து மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

இதன்போது, திருட்டுப்போன கைப்பையும் அதில் இருந்து 20 ஆயிரம் ரூபாய் பணத்தை மீட்டதுடன், திருட்டில் ஈடுபட்ட பெண்ணிடம் இருந்து மேலதிகமாக 65 ஆயிரம் ரூபாய் பணத்தை மீட்டுள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## திருமலை செயலகத்தில் 'செயிரி வாரம்'



■ ஏ.எச்.ஹஸ்பர்

அரச நிறுவனங்களில் 'செயிரி' வாரத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து மாவட்ட செயலக அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம்.ஹேமந்த குமார தலைமையில் திங்கட்கிழமை (01) அன்று நடைபெற்றது.

அரசாங்க நிறுவனமொன்றில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு தமது கடமைகளை முறையாகவும் சுதந்திரமாகவும் நிறைவேற்றுவதற்கு உகந்த வகையில் சுத்தமானதும், சுகாதார பாதுகாப்புள்ளதுமான, ஆபத்துக்கள் இல்லாத சுற்றுச்சூழலை உருவாக்குவது ஒவ்வொரு நிறுவனத் தலைவரினதும் பொறுப்பாகும். அத்தகைய சூழல் சேவைப்பெறுநர்களின் மத்தியிலும் அலுவலகத்தைப் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்தும். அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடப்பரப்பை பயனுள்ளதும் வினைத்திறனானதுமான முறையில் பயன்படுத்துவதற்கும், அலுவலர்களுக்கு அமைதியான மற்றும் சுதந்திரமான வேலைச் சூழலை உருவாக்குவதும் அவசியமாகும். அதற்கான ஒரு நடவடிக்கையாக ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்திலும் குவிந்துள்ள தேவையற்ற பொருட்களை அகற்றுவதற்காக 'செயிரி வாரம்' பிரகடனப்படுத்தி செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக இந்நிகழ்ச்சித்திட்டமானது திருகோணமலை மாவட்ட செயலகத்திலும் செயற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2025ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 01ஆம் தினத்திலிருந்து 04ஆம் தினம் வரையில் அமுல்படுத்தப்படல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## ஹேஷுடன் ஒருவர் கைது



சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியுடைய ஹேஷ் போதைப்பொருளுடன் இருவர் கைது-செய்யப்பட்டதாக-கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவு-தெரிவித்துள்ளது.

சந்தேக-நபர்களிடமிருந்து 1.5 கிலோ-ஹேஷ்போதை ப்பொருள் மற்றும் 100,000 ரூபாய் பணம் ஆகியவை மீட்கப்பட்டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை-நடத்துவதாகக் கூறி-ஹாஷ் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக கல்கிஸ்ஸை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக-நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இரத்மலானை பகுதியில் மாதத்திற்கு 30,000 ரூபாய் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு வீட்டில் இருந்து இந்த வியாபாரத்தை மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந்தது.

அதற்கமைய குறித்த வீட்டைச் சோதனை செய்த போது ஒரு-கிலோகிராம் ஹேஷ் போதை ப்பொருள் மறைத்து-வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

## இனிய பாரதியின் இரு சகாக்கள் கைது

■ கனகராசா சரவணன்

இனிய பாரதியின் சகாவான கல்முனையைச் சோந்த டிலக்ஷன் சனிக்கிழமை (30) அன்று கைது செய்யப்பட்டுள்ளதுடன், காரைதீவைச் சேர்ந்த இன்னொரு சகாவான வன்னியசிங்கம் பரமேஸ்வரன் வெளிநாட்டிற்கு தப்பிச் செல்ல முயன்ற நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி.எம்.வி.பி. கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பாளருமான கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை 2007.6.28ஆம் திகதி திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக படுகொலை செய்யப்பட்ட பிரதேச சபை தவிசாளரின் மனைவி சிஐடியிடம் முறைப்பாடு செய்திருந்தார்

இதையடுத்து, சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த ஜூலை 6ஆம் திகதி திருக்கோவில் வைத்து இனிய பாரதியும் அவரது சகாவான மட்டு. சந்திவெளியைச் சேர்ந்த சசிதரன் தவசீலன் என்பவரை சந்திவெளியில் வைத்து சிஐடியினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இனிய பாரதியிடம் மேற்கொண்ட விசாரணையில் திருக்கோவில் முன்னாள் பிரதேச சபை தவிசாளர் உதயகுமாரை 2007-6-28 சம்பவதினம் வீட்டில் இருந்து வெளியே வீதியில் சென்று கொண்டிருந்த போது அவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய பின்னர் கைக்குண்டை வீசி படுகொலை செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக இனிய பாரதியின் சகாக்களான கல்முனையைச் சேர்ந்த டிலக்ஷன் மற்றும் வவுணதீவு பாவக்கொடிச் சேனையைச் சேர்ந்த வன்னியசிங்கம் பரமேஸ்வரன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இருவரையம் விசாரணைக்காக சி.ஐ.டியினர் கொழும்பிற்கு கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.









மன்னாரில்...

## தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 45ஆவது நினைவேந்தல்...

தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 45ஆவது ஆண்டு நினைவு தினம் திங்கட்கிழமை (01) அன்று மன்னார் மற்றும் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.


(எஸ்.ஆர்.லெம்பேட், க.அகரன்)



வவுனியாவில்...







# பாதாள உலகக் கோஷ்டியினர் தண்டிக்கப்படவேண்டும்

நாட்டில் ஒவ்வொரு நாளும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. அவ்வாறான சம்பவங்களில் சிலர் பலியாகி விடுகின்றனர். பலர் காயமடைந்து விடுகின்றனர். துப்பாக்கி இயங்காமையால் ஒரு சிலர் தப்பித்துக் கொள்கின்றனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் ஒரு சில மணிநேரத்துக்குள் கைது செய்யப்பட்டு விடுகின்றனர்.

இவற்றுக்கு இடையில், பரஸ்பரத் துப்பாக்கிச் சூட்டில் பாதுகாப்பு தரப்பினர் காயமடைந்தும், குற்றஞ்சாட்டப்பட்டவர் மரணித்தும் விடுகின்றனர். அந்த கதை அத்தோடு நின்று விடும். எனினும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை நடத்தும் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்தோனேசியாவில், இலங்கை பொலிஸாரால் நடத்தப்பட்ட மிகவும் தனித்துவமான பெரிய அளவிலான நடவடிக்கையில் பாதாள உலகக் கும்பல் உறுப்பினர்கள் ஐவர் கைது செய்யப்பட்டு, இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். அவர்களிடம், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தோனேசியாவிலிருந்து பாதாள உலகக் கும்பல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டபோது, " பாதாள உலகக் கும்பல் ஒரு வெட்கமற்ற குழு என்றும், அத்தகைய பொறிகளை உருவாக்குவதைத் தவிர்க்குமாறும்" புதிய பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, விமான நிலைய வளாகத்தில் இருந்து கேட்டுக் கொண்டார்.

பாதாள உலக உறுப்பினர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் எத்தனை எத்தனை குடும்பங்கள் சீரழிகின்றன. போதைக்கு அடிமையானவர்கள், போதைப்பொருளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணம் கிடைக்காவிடில், கடத்தல்,களவு, கொள்ளை, கொல்லைச் சம்பவங்களிலும் ஈடுபடுகின்றனர்.

இதனால், பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அஞ்சி, அஞ்சியே வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதற்கிடையே கப்பம் பெறலும் அதிகரித்துள்ளது.

வெளியில் சொல்லிவிட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படுமென அஞ்சும் சிலர் பிரதேசத்தை விட்டே குடும்பத்துடன் கிளம்பிவிடுகின்றனர்.

சிறந்த மற்றும் நியாயமான உலகில், ஊழல்வாதிகள், மோசடி செய்பவர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு இடமில்லை. அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எனினும், கடந்த காலங்களில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றது குறைவாக இருந்தது.

அரசியல் சாக்குப்போக்குகளால் மறைக்கப்பட்ட பாதாள உலகத்தையும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலையமைப்பையும் ஒடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பாராட்டவேண்டும்.

கைது செய்யப்படுவார்களிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் பின்னர் அந்த வலையமைப்பை முழுமையாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், பாதாள உலகக் கோஷ்டியினரால் சேகரிக்கப்பட்டிருக்கும் சட்டவிரோதமான சொத்துக்கள் முடக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டும். அதுமட்டுமன்றி, பாதாள உலகக் கோஷ்டி தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும், அவர்களின் சகாக்கள் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களையும் கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்தி, கடுமையான தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

என்றும் உவகையுடன் உலகில் வாழ்வது எப்படி என கட்டாயம் அறிய வேண்டும். எப்பொழுதும் சிடு மூஞ்சியுடன் இருக்காதே என பலர் சொல்வதுண்டு. தங்களின் முகம் எப்படி மாறுகின்றது எதுவெனப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒருவர், தனக்கு வேண்டியவர்களுக்குச் சொல்லும் வார்த்தைகளைப் புரியாமலே, சினம் கொள்ளும் நபர்கள் ஏராளம். கேட்கும் போது வார்த்தைகளின் அர்த்தம், பற்றி முழுமையாக அறியவேண்டும்.

கண்டதற்கும் ஐயப்படுவது அழகல்ல. உங்களுக்கு ஐயம் ஏற்றபடி கருத்துக் கூறினால், அது என்னவென சம்பந்தப்பட்டவர்களிடையே அமைதியாகக் கேட்டு அறிக.

எப்பொழுதும் எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர் எனும் நல் எண்ணத்தை மனதில் இருத்துக. ஒருவரிடம் உதவி கேட்கும் மனப்பான்மையுடன் பழகுவது அழகல்ல. ஒருவரிடம் நட்புப் பூணுவது சுய நலத்துடனானதாக இருக்கலாகாது.

அன்பு தேவையற்ற தவறான ஆராய்ச்சிகளை நிறுத்த வல்லது. பொய்மை இல்லாத பரந்த உணர்வு களிப்பு மிக்கது.

– பருத்தியூர் பால.வைரவநாதன்

# சிறிதரன் எம்.பியின் கருத்து: முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் இல்லையா?



மொஹமட் பாதுஷா

இலங்கையில் உண்மையிலேயே எத்தனை தேசிய இனங்கள் வாழ்கின்றன? முஸ்லிம்களும்; மலையக மக்களும் தனித்தனியான தேசிய இனங்கள் இல்லையா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையைத் தொடர்ந்தே இந்த கேள்விக்கான விடையைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சபையில் உரையாற்றிய சிறிதரன் எம்.பி. 'சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டில் இரு தேசிய இனங்கள் உள்ளன. ஒன்று தமிழ் பேசும் மக்கள் தமிழ்த் தேசிய இனம் மற்றையது சிங்கள தேசிய தினம் ஆகியவையாகும்' என்று கூறி, தொடர்ச்சியாக உரையாற்றினார்.

பெருந்தேசிய அரசியலில் தற்போதைய ஜனாதிபதியான அனுரகுமார திசாநாயக்க ஒரு எம்.பியாக எவ்வாறு கனகச்சிதமாக உரையாற்றினாரோ, அவ்வாறு உரையாற்றுகின்ற ஒரு தமிழ் அரசியல்வாதியாகவே சிறிதரன் எம்.பியைச் சொல்ல முடியும். இவர் உரையாற்றுகின்ற பாணிக்கு முஸ்லிம் சமூகத்திடையேயும் ஒரு வரவேற்பிருந்தது எனலாம்.

இலங்கையில் சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மட்டுமன்றி, முஸ்லிம் மக்களும் மலையக மக்களும் கூட தனியான தேசிய இனங்களாக வாழ்கின்றனர். ஏன்? கத்தோலிக்க மக்களும், பூர்வீகக் குடியைச் சேர்ந்த (வேடுவ) மக்களும் தங்களைத் தேசிய இனங்களாக முன்னிறுத்த முடியும் என்பதுதான் யதார்த்தமாகும்.

இதுவெல்லாம் தெரியாத ஒரு அரசியல்வாதி என சிறிதரனை குறிப்பிட முடியாது. அத்துடன், அவர் தவறுதலாக உரையாற்றியதாகக் குறிப்பிடவும் முடியாது. அப்படிச் செய்திருந்தால் அந்த 20 நிமிட உரையில் எங்காவது ஒரு இடத்தில் அவர் அதனைத் திருத்தியிருப்பார் அல்லது வெளியில் வந்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருப்பார்.

எனவே, அவர் இதனைத் தெளிவாக, திட்டமிட்டே உரையாற்றியிருக்கின்றார் என்றே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. சிறிதரனுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் எம்.பிக்களும் இவ்விடயத்தைச் சரிப்படுத்தவோ சமாளிக்கவோ முற்படவில்லை என்பது இங்கு கவனிப்பிற்குரியது.

இந்த நாட்டில் இரண்டு தேசிய இனங்கள் மட்டும்தான் வாழ்கின்றன என்ற தொனியில் உரையாற்றியதன் மூலம், அபத்தமானதும் பிற்போக்குத்தனமானதுமான கருத்தொன்றை மேற்படி தமிழ் எம்.பி. முன்வைத்திருக்கின்றார். இப்படியொரு கருத்தை சிறிதரன் போன்றவர்களிடமிருந்து முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கவில்லை.

வரைவிலக்கண அடிப்படையில் நோக்கினால், இனம் என்பது வேறு, தேசிய இனம் என்பது வேறு. ஒரு மக்கள் கூட்டம் வாழுகின்ற நிலப்பகுதி, கலாசாரம், பண்பாட்டு நடைமுறைகள், இன மரபு வரலாறு, மதம், மொழி என்பவற்றின் அடிப்படையிலேயே தேசிய இனங்கள் வரையறை செய்யப்படுகின்றன.

இதன் அடிப்படையில் முஸ்லிம்கள் நூற்றாண்டு காலமாக இலங்கையில் ஒரு தேசிய இனமாக ஆகிவிட்டனர். இது, தமிழ்த் தேசியமோ சிங்கள தேசியமோ நிராகரிக்க முடியாத நிதர்சனமாகும்.

அதனையும் மீறி யாராவது, இரண்டு தேசிய இனங்கள்தான் இந்த நாட்டில் உள்ளன என்று கூறுவார்களாயின் அதன் பின்னால் ஒரு கருத்தியல் ரீதியான நிகழ்ச்சிநிரல் இருக்கின்றது என்றுதான் கருத வேண்டியுள்ளது.

ஆரம்பக் காலங்களில் மொழியைப் பிரதான காரணியாக வைத்து தேசிய இனங்கள் தீர்மானிக்கப்பட்டாலும் அப்படி மொழியை மட்டும் கொண்டு தேசிய இனங்களைத் தீர்மானிக்கும் காலம் இப்போது மலையேறிப் போய்விட்டது.

இப்போது மொழி என்பது, ஒரு தேசிய இனத்தை அடையாளப்படுத்துவதற்கான ஏகப்பட்ட காரணிகளுள் ஒரேயொரு காரணி மட்டுமே என்பதைக் கவனிக்க வேண்டும்.

முஸ்லிம்கள் மொழியால் ஒன்றுபட்டாலும் ஏனைய காரணிகளால் வேறுபடுகின்றார்கள். கலாசாரம், மதம், பண்பாடு, மரபினம், ஆட்புல எல்லை, பொருளாதார அம்சங்கள் என ஏனைய எல்லா விதத்திலும் பிரத்தியேகமான அடையாளங்களை முஸ்லிம் சமூகம் கொண்டிருக்கின்றது.

அத்துடன், தெற்கில் பல பகுதிகளில் முஸ்லிம்கள் தங்களது தாய் மொழியாக சிங்களத்தையே பேசுகின்றனர் என்பதையும் சிறிதரன் போன்றோர் மறந்து விடக் கூடாது.

அவர் சொல்வது போல, வடக்கு, கிழக்கில் மொழியை அடிப்படையாக வைத்து முஸ்லிம்களைத் தமிழ் பேசும் தேசிய இனமாகக் கருதுவதாயின், தெற்கில் முஸ்லிம்கள் சிங்களத்தைப் பிரதானமாகப் பேசுகின்றார்கள் என்பதற்காக சிங்கள தேசிய இனத்திற்குள் உள்ளடக்க முடியுமா?

அதுமட்டுமன்றி, தமிழை விட அதிகமாக சிங்களத்தைப் பேசுகின்ற தமிழர்களையும் சிங்கள தேசிய இனமாகக் கொள்ள முடியுமா?

முஸ்லிம்களும் தமிழர்களும் தமிழ் பேசும் சமூகங்களே அன்றி தமிழ் பேசும் ஒரு தனி தேசிய இனம் அல்ல. வடக்கு, கிழக்கில் அவர்கள் தமிழர்களோடும் அதற்கு வெளியே பெரும்பான்மைச் சமூகத்தோடும் பின்னிப் பிணைந்து வாழ்கின்றார்கள் என்பதற்காக தங்களது தேசிய இனத்திற்குள் முஸ்லிம்களை உள்ளடக்கி விட முடியாது.

குறிப்பாக, முஸ்லிம்களும் தமிழ் பேசும் இனம் என்று கருதியிருந்தால் வடக்கில் இருந்து தனியே முஸ்லிம்களைப் புலிகள் வெளியேற்றியிருக்க மாட்டார்கள். வடக்கு, கிழக்கில் பல இடங்களில் முஸ்லிம்கள் 'தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு' தமிழ் ஆயுதக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள்.

இதனையெல்லாம் மறந்து விட்டு, கருத்துக் கூற முற்படும் பழமைவாத சிந்தனையைத் தமிழ் அரசியல்வாதிகள் களைய வேண்டும். முஸ்லிம்களைத் தனியொரு தேசிய இனமாகக் கூட கருத முடியாத மனநிலையில் இருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள்தான், சிங்கள தேசியத்திடம் தமிழ் மக்களுக்கான உரிமையை வேண்டி நிற்கின்றனர் என்பது முரண்நகை இல்லையா?

20 இலட்சத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்ட ஒரு சமூகத்தை, மதம், கலாசாரம், பண்பாடு என பல அடிப்படைகளில் தனித்துவமான அடையாளங்களின் அடிப்படையில் ஒரு தேசிய இனமாகக் கூறுவதற்குக் கூட விரும்பாத சூழலில் நாம், நல்லிணக்கம் பற்றிப் பேசுவது நகைப்புக்கிடமானது இல்லையா?

உலக அரங்கில் தேசிய இனங்களைப் பிரகடனப்படுத்தும் ஒழுங்குகள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே மாறிவிட்டன. முன்னைய காலங்களில் மொழி ஒரு பிரதான தீர்மானிக்கும் சக்தியாக இருந்த போதும், இப்போது மொழியை விட வேறு பல காரணிகள்தான் தேசிய இனங்களைத் தீர்மானிக்கின்றன என்பதைத் தெரியாதவர்கள் தெரிந்து கொள்ளட்டும்.

மதப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டே நெதர்லாந்தில் வாழ்ந்த மக்களில் ஒரு பகுதியினர் தம்மைத் தேசிய இனமாக பிரகடனப்படுத்தி, பெல்ஜியம் என்ற நாடாகப் பிரிந்து சென்றனர். தவிர, மொழியை அடிப்படையாகக் கொண்டல்ல. இஸ்ரேல் உருவானதும் மொழியை அன்றி யூதர்கள் என்ற அடையாளத்தை மையமாகக் கொண்டே ஆகும்.

மதத்தை அடிப்படையாக வைத்து ஒரு தேசிய இனம் பாகிஸ்தான் என்ற நாட்டை உருவாக்கியது. உலகில் வாழும் ஆங்கிலம் பேசுகின்ற எல்லோருமே ஒரு தேசிய இனத்திற்குள் உள்ளடங்குவது கனவிலும் சாத்தியமில்லை.

ஐரோப்பாவில், ஆங்கிலம் என்ற ஒரே மொழியைப் பேசுகின்ற சமூகங்கள் வேறு காரணங்களை முன்வைத்து தம்மை, தனியான தேசிய இனங்களாக முன்னிறுத்தி, பிரிந்து செல்ல முற்படுவதை நாம் கண்டிருக்கின்றோம். அரபு மொழியைப் பேசும் நாடுகளிலும் இவ்வாறு தனித்தனியான பல தேசிய இனங்கள்; உருவாகியுள்ளன.

இதனையெல்லாம் இருட்டடிப்புச் செய்து விட்டு, இலங்கையில் இரு தேசிய இனங்கள் உள்ளன என்று நாட்டின் உயரிய சபையில் உரையாற்றிச் செல்வது. குறுகிய அரசியல் சிந்தனையையே வெளிப்படுத்துகின்றது.

பாராளுமன்றத்தில் இக்கருத்தை சிறிதரன் எம்.பி. கூறியபோது, இரு முஸ்லிம் எம்.பிக்கள் மாத்திரம் எழுந்து பதிலளித்தனர். ஹக்கீம். றிசாட் போன்ற கட்சித் தலைவர்களும் அரச தரப்பு முஸ்லிம்களும் மௌனமாக இருந்தாலும் கூட, இக்கருத்தை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் கண்டிக்கின்றது.

இப்படியான வேலையைச் சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில் இருந்தே பெயர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில தமிழ் தலைவர்கள் செய்து வந்தார்கள். 'முஸ்லிம்களும் தமிழர்கள்' அல்லது 'தமிழ் பேசும் இனத்தவர்' என்று சொன்னார்கள்

ஆனால், அதனை முஸ்லிம் சமூகம் மறுதலித்து. தாங்கள் ஒரு தனி தேசிய இனம் என்பதைப் பல வழிகளில் நிரூபித்தது. பின்வந்த தமிழ்த் தேசிய தலைவர்கள் இந்த யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு செயற்பட்டதாகச் சொல்லலாம்.

ஆனால், சிறிதரன் எம்.பியின் அண்மைய உரையானது, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் குறுகிய அரசியல் சிந்தனை என்ற முருங்கை மரத்தில் மீண்டும் ஏறுகின்றார்களா? என்ற சந்தேகத்தைக் குறிப்பாக முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியுள்ளது,

இக்கருத்து உண்மையில், சிறிதரன் எம்.பியின் தனிப்பட்ட கருத்தா அல்லது ஒட்டுமொத்த தமிழ்த் தேசியத்தின் கருத்தும் இதுதானா என்பதைத் தெளிவுபடுத்துவது ஏனைய தமிழ் எம்.பிக்களின் பொறுப்பாகும்.

## கடிதங்கள்

### "வீதியை புனரமைத்து தரவும்"

மஸ்கெலியா நகரில் உள்ள மதத் தலங்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்குச் செல்லும் வீதி சேதமடைந்து காணப்படுவதால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இருப்பதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன், அதில் மழைக் காலங்களில் மழைநீர் நிரம்புவதால், வாகன சாரதிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேச வாசிகள் அசௌகரியத்திற்குள்ளாகுவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலைமை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி, வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– சுதத் எச்.எம்.ஹேவா






### புலன் கடந்த புலக்காட்சியில்

# தொலையுணர்வு



**நடராசா கோபிராம்,**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.



(திங்கட்கிழமை தொடர்ச்சி...)

உளவியலாளரான BerholdSchwark MD நெருங்கியவர்களுள் டெலிபதி சக்தி இருக்கும் என நம்பினார். இதனால் இவர் தனக்கும் தனது மனைவிக்கும் தனது இரு மகன்களுக்கும் இடையே உள்ள டெலிபதி அனுபவங்களைத் திகதியுடன் குறித்து வைத்தார்.

இவர் எட்டு ஆண்டுகளில் கிட்டதட்ட 1,500க்கு மேற்பட்ட தெளிவான டெலிபதி உணர்வுகள் ஏற்பட்டதாகக் குறிப்பிடுகின்றார்.

Mental communication என அழைக்கப்படும் இது Brain waves இனை வைத்துப் புரிதல் மூலம் இடம்பெறுகின்றது. இது எல்லா நேரமும் நடப்பதில்லை ஊடகம், தகவல் தொடர்பு சாதனங்களில் ஆக்கிரமிக்கப்பட்ட இவ்வுலகத்தில் அதிசயிக்கும் தொடர்பாடல் வடிவமாக டெலிபதி மனித மூளை மற்றும் ஆன்மாவுடனான தொடர்பாடல் என்று வரையறுக்கப்படுகின்றது. ஆழ்மன உதவியுடன் மனித மற்றும் பிற உயிரினங்களுடன் தொடர்பு கொள்ளும் முறையாக இது காணப்படுகின்றது.

டெலிபதி நிகழ்வுகள் சாதாரணமான வாழ்வில் நிறைய நடக்கின்றன. இதில் மன எண்ணம் மற்றும் கருத்துகள் மிக நெருக்கமானவர்களிடம் பரிமாற்ற பயன்படுகிறது. தாய், தந்தை, பிள்ளை, சகோதரர், நெருங்கிய நண்பர்கள், உறவு நிலையில் இப்போது இது நிறையவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

வீட்டிற்குள் நாம் எங்கோ சென்று விட்டு நுழையும் போது, "அம்மா நான் இப்பதான் உன்னை பற்றி பேசிட்டு இருக்கிறேன் நினைச்சுட்டு இருந்தேன் வாராய்" என கூறுவது நாம் ஒரு நெருங்கிய நண்பனையோ அல்லது நண்பியையோ நினைக்கும் போது அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வருதல், குறுஞ்செய்தி வருதல் மற்றும் ஒருவரை ஒருவர் பார்க்கும் போது அதே அவரும் அதே நேரத்தில் பார்த்தல், பாட்டுப் பாடல், முதலானவற்றின்போது நெருங்கிய நண்பர் ஒரே நேரத்தில் சொல்லல் மற்றும் விரிவுரைகளில் கேள்விகள் வினவப்படும் போது நண்பர்கள் கூற நினைக்கும் போது பதில் கூறல் முதலானவற்றைக் குறித்து காட்ட முடியும். இரட்டை சகோதரர்கள் மத்தியில் அதிக அளவு செயற்பாடுகளில் இருக்கும் நுண்ணறிவுகள் முதலானவற்றையும் குறிப்பிட முடியும். ஒரு சிலர் இக்கருத்து கொண்டே வெளிநாடுகளில் உள்ள தனி நபர் உறவுகள் பற்றியும் அவர் என்ன செய்கிறார்கள் என்பது பற்றியும் சரியாகக் கூறுவர். இவ்வாறு பல்வேறுபட்ட நிகழ்வுகள் சம்பவங்களில் டெலிபதியின் தாக்கம் இருப்பதைக் காணலாம்.

உள்மன உதவியுடன் டெலிபதி நிகழும். இந்த டெலிபதி தன்னை அறியாமலும் நடக்கும் நுணுக்கம் அறிந்து செய்தி அனுப்புபவரும் உண்டு. வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் ஒருவர் பற்றி எண்ணுவோம் இது தனிப்பட்டதாகக் காணப்படுகின்றது. குழுவாகியும் டெலிபதி செய்யலாம் என்று Society Of Psychological Research கூறுகின்றது. தானாக நடக்கும் என்பதை விட நுணுக்கம் அறிந்து நடப்பதால் நன்மைகளும், தீமைகளும் ஏற்படுகின்றன.மாயத் தோற்றம்,வசப்படுதல் நோய் வழங்கல், வலி முதலான தீயனவற்றையும் ஏற்படுத்துவதாக அமையாத வரையில் டெலிபதி சிறந்த ஒன்றாகக் கருதப்படும்.

இதன் அடிப்படையில், டெலிபதி தொடர்பான பல்வேறு ஆய்வுகள் மனிதரற்ற விலங்குகளிலும் மேற்கொள்ளப்பட்டன. எலியுடன் தொடர்பு கொள்வதற்கு டெலிபதி முறை பயன்படுத்தப்படுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. பிரித்தானிய உளவியலாளரான Dr.Willbertmoore தொலைவு சக்தி ஒரு விசேட சக்தி என்றும் அது சிந்தித்தலின் அடிப்படையில் செயல்படவில்லை அது உணர்வுப்பூர்வமாகச் செயல்படுகிறது" என கூறுகின்றார். டெலிபதி தனக்குத்தானே அல்லது தான் பிறருக்குச் செய்யக் கூடியதாகக் காணப்படும். இது நாம் சாதாரணமான வழக்க செயல்களுக்கு மாறுபட்ட செயல்களை எப்படி பொறுப்பேற்கிறது என்பதையும் விளக்கப்படுத்துகின்றது. தொலைதூரம் செய்தி அனுப்பும் மற்றும் பெறும் முறை என்பதால் Myers என்பவர் Telepathy என கூற காரணமாக அமைந்தது.

ஆங்கில ஹொலிவூட் திரைப்படங்களில் கூட அதிகமாக டெலிபதி சம்பவங்கள் பாத்திரங்களுடனா விளக்கப்படி இருப்பதை நாம் காணலாம். X-Men என்று அழைக்கப்படும் ஆங்கில ஹாலிவுட் திரைப்படத்தில் வரும் பேராசிரியர் மற்றும் பிறிதொரு பாத்திரம் டெலிபதி சக்தி கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. படத்தில் பல பாத்திரங்கள் சக்தி உள்ளது போல, காட்டி இருப்பினும் டெலிபதி இந்த இரண்டு பாத்திரங்களுக்கும் பிரதானமாகக் காணப்படுகின்றது. படத்தில் டெலிபதி உணர்வு மூலம் துணை நடிகர் எதிரிகளின் கப்பல் மாலுமியின் மனதைக் கட்டுப்படுத்தி தகவல் அனுப்பி வரவிருக்கும் தீய செயலை தடுப்பது போன்று காட்டப்பட்டிருக்கும். அதனை விட சில நல்ல, கெட்ட காரியங்களுக்காக உபநடிகன் டெலிபதியை பயன்படுத்தி இருப்பதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

டெலிபதியினை முற்றாக நம்பாவிட்டாலும் கூட விஞ்ஞானத்தில் மிக முக்கிய ஒன்றாக எண்ணிப் பல ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. Neurolink என்ற company மூளை நினைப்பதை chip மூலம் சேமித்து கணினியில் பொருத்தி அதன் மூலம் கனவுகளையோ கடந்த காலங்களையோ பார்க்க முடிகின்றது என குறிப்பிட்டுள்ளதுடன் எதிர்கால நவீன உலகில் வேலைகளை இலகுவாக்கவும் கட்டுப்படுத்த முடியும் என கூறுகின்றது. உதாரணமாக வீட்டுக்குள்ளே போகும்போது மின்குமிழை போடவேண்டும், அணைக்க வேண்டும் என நினைப்பதையும் உடனே chip மூலம் தகவல் கடத்தப்பட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறும். இவற்றுக்கான ஆராய்ச்சி இன்றுவரை இடம்பெற்ற வண்ணமே உள்ளது. இது டெலிபதியின் எதிர்கால நிலையைக் காட்டுவதாக உள்ளது. கனவுகள் முதலியன ஞாபகங்களைச் சேமித்துப் பார்க்கப் பயன்படும் என கூறப்பட்ட இந்த எதிர்கால டெலிபதி தொழில்நுட்பம் கணினி உடனும் நவீன சாதனங்களுடன் இணைந்த படியினால் அதனை hack செய்வதன் மூலம் கல்வி மற்றும் அரசியல் மற்றும் மனித வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பல பிரச்சனைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் இங்கே நாம் மறக்கக்கூடாது.

ஆரம்பத்தில் டெலிபதியே இல்லை என விஞ்ஞானம் குறிப்பிட்ட போதிலும் தற்கால ஆய்வுகளில் ESP என்ற விஞ்ஞான ஆய்வுக்கு உட்பட்டதாக இது தொடர்பான பல ஆய்வுகளை நடத்தி வருவதாக குறிப்பிடப்படுகின்றது. ஹாவாட் பல்கலைக்கழகத்திலும் இது தொடர்பான மூளை சார் ஆய்வுகள் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது ஆகும். இது 'மாயம் இல்லை மந்திரம் இல்லை" என டெலிபதி பற்றி ஆய்வு குறிப்புகளை வெளியிட்டவராக குளியோ ரூபினி காணப்படுகின்றார்.

இந்த மனத்தந்தி முறை சாதாரணமாகவும் அதாவது எனது நண்பர் ஒருவர் என்னைப் பற்றி அதிகமாக நினைக்கும் போதெல்லாம் நான் வெளியில் இருந்து அவரை வந்து பார்ப்பதாக அவர் குறிப்பிடுகிறார். (நூறு ஆயுளடா உனக்கு) என்று எமது பெற்றோர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் "இப்பதான் நினைக்கிறேன் வந்துட்டா" என கூறுவதும் ஒன்றாகக் காணப்படுகின்றது. சமீபத்தில் இந்தியாவில் இருக்கும் ஒரு நபருக்கும் பிரான்ஸ் நாட்டில் இருக்கும் ஒருவருக்கும் இடையில் புதிய தொழில்நுட்பம் மூலம் செய்தி அனுப்பி சோதனை செய்து பார்க்கப்பட்டது மூலம் ஒரு மனிதனின் மூளையிலிருந்து இன்னொரு மனிதனின் மூளைக்கு டெலிபதி அனுப்புவது இதுதான் முதல் தடவையாகக் கொள்ளப்படுகின்றது. எனவே புலன் கடந்த புலக்காட்சி வகைகளில் டெலிபதி முக்கியத்துவம் மிக்க ஒன்றாகக் கருதப்படுகிறது.

(முற்றும்)

# நடிப்புக்கு முழுக்கு?



பல்வேறு பிரச்சினைகளை கடந்து மீண்டும் நடிக்க வந்துள்ள சமந்தா, தயாரிப்பாளராகவும் அவதாரம் எடுத்தார். தெலுங்கில் அவர் தயாரித்து வெளியிட்ட 'சுபம்' படம் நல்ல பெயரை பெற்றுத்தந்தது.

இந்த நிலையில், சினிமாவில் இருந்து விலகப்போவதாக சமந்தா கூறியிருக்கும் தகவல் ரசிகர்களை அதிர்ச்சியடைய செய்துள்ளது. அண்மையில் ரசிகர்களுடனான ஒரு கலந்துரையாடலில், "ரசிகர்கள் எனக்குத் தந்த ஆதரவை என்றுமே நான் மறக்க மாட்டேன். அதேவேளை, பல புதிய பரிமாணங்களை எடுக்கவும் யோசிக்கிறேன்.

வருங்காலத்தில் நான் படத் தயாரிப்பு மற்றும் சில தொழில்களில் கவனம் செலுத்தலாம் என்று யோசிக்கிறேன். எனவே, நடிப்பதை நிறுத்தலாமா? என்றும் யோசிக்கிறேன்" என்று சமந்தா குறிப்பிட்டார்.

சமந்தாவின் இந்த பேச்சு ரசிகர்களை அதிர்ச்சி கொள்ள செய்தாலும், "சமந்தா விளையாட்டுக்காக இதை சொல்லியிருக்கலாம்" என்று மனதைத் தேற்றி வருகிறார்கள்.

# எகிறும் எதிர்பார்ப்பு

ரஜினி நடிப்பில் ஜெயிலர் படத்தை இயக்கியவர் நெல்சன். அந்த படம் 600 கோடி வசூலித்தது. இதையடுத்து, ரஜினி நடித்த 'வேட்டையன்' திரைப்படம் பெரிதாக வசூலிக்காத நிலையில், தற்போது கூலி படம் 500 கோடிக்கு மேல் வசூலித்திருக்கிறது.

இந்த நிலையில், மீண்டும் நெல்சன் இயக்கும் ஜெயிலர் 2 படத்தில் தற்போது நடித்து வருகிறார் ரஜினி. 'வேட்டையன்' படத்தில் பொலிவூட் நடிகர் அமிதாப்பச்சன் நடித்த நிலையில், 'கூலி' படத்தில் அமீர்கான் நடித்திருந்தார்.

'ஜெயிலர்-2' படத்தில் பொலிவூட் நடிகை வித்யாபாலன் இணைந்துள்ள நிலையில், 'ஜெயிலர் -2' படம் குறித்து ஒரு விழாவில் இயக்குநர் நெல்சன் பேசினார்.

அப்போது, "ஜெயிலர் படத்தைப் போலவே 'ஜெயிலர் 2' படமும் மிகச் சிறப்பாக வந்துள்ளது. என்றாலும், இந்த படம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று இப்போதே என்னால் எதுவும் சொல்ல முடியாது.

ஆனால், கண்டிப்பாக ரசிகர்களுக்கு பிடித்தமான படமாக இருக்கும். இப்போதே 'ஜெயிலர் 2' படம் குறித்து ஓவராக ஹைப்பை ஏற்றிப் பேச விரும்பவில்லை. ஏற்கெனவே 'ஜெயிலர் 2' படம் குறித்து ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்து வருகிறது.

இந்த நேரத்தில், நானும் இன்னும் ஹைப்பை ஏற்றும் வகையில் பேச வேண்டாம்



என்று நினைக்கிறேன். படி நானும் பேசினால் படத்துக்கான எதிர்பார்ப்பு இன்னும் அதிகரித்து விடும்" என்று கூறினார்.




# தமன்னாவின் தனி 'லவ்'

நடிகை தமன்னா தனக்கு சமோசா மீது மிகப்பெரிய லவ் இருப்பதாக தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "டீ, காபியுடன் சமோசாவை சேர்த்து சாப்பிட்டால் ரொம்ப சூப்பராக இருக்கும். ஒரே நேரத்தில் ஐந்து சமோசாக்கள் வரை நான் சாப்பிட்டு விடுவேன்.

அதிலும் உருளைக்கிழங்கில் செய்யப்பட்ட சமோசாக்கள் என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும். முக்கியமாக திரையரங்கு செல்லும்போது சமோசாக்களை அடிக்கடி சாப்பிடுவேன். அதன் மீது எனக்கு அப்படியொரு தனி லவ்" என்று தெரிவித்துள்ளார் தமன்னா.

பொலிவூட் நடிகர் விஜய் வர்மாவை சில ஆண்டுகளாக காதலித்து வந்த தமன்னா சில மாதங்களுக்கு முன்பு அவரை பிரேக் அப் செய்து விட்ட நிலையில், ஊடகங்களுக்கு அளித்துள்ள ஒரு பேட்டியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.



# பார்த்திபன் படத்தில் 'லப்பர் பந்து' ஹீரோயின்

இரவின் நிழல், டீன்ஸ் படங்களை இயக்கிய பார்த்திபன் அடுத்து 3 படங்களில் கவனம் செலுத்தி வருகின்றார். இந்த நிலையில், இது குறித்து பார்த்திபன்

அவர் கூறுகையில், "அடுத்து ஆண்டாள் என்ற படத்தை இயக்க உள்ளேன். லப்பர் பந்து' சுவாசிகா ஹீரோயின். தலைப்பில் இருந்தே இது ஹீரோயினுக்கு முக்கியத்துவமுள்ள படம் என தெரியும். டூரிஸ்ட் பேமிலி மாதிரி இது பக்கா குடும்பக்கதை.

அதற்கடுத்து –ஆடியன்ஸ்சும் ஆவுடையப்பனும்' என்ற விருது படத்தை இயக்க உள்ளேன். அந்த படத்தின் முயற்சியும், சிங்கிள் ஷாட்டும் பேசப்படும். விரைவில் என் மகன் ராக்கி இயக்குநர் ஆகப்போகிறார். அந்த படத்திலும் ஒரு ரோலில் நடிக்கிறேன். அதில் வடிவேலுவை நடிக்க வைக்க முயற்சி நடக்கிறது" என்று கூறியுள்ளார்.

அத்துடன், அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அர்ஜுன்தாஸை வைத்து படம் இயக்க முயற்சிக்கிறேன் என கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிம்லா

இமாச்சல் பிரதேசத்தில் பருவமழை:

# 320 பேர் உயிரிழப்பு

## உட்கட்டமைப்பு பாரிய சேதம்



இமாச்சல பிரதேசத்தில் தொடரும் பருவமழையின் சீற்றம் காரணமாக கடந்த ஜூன் 20 முதல், ஒட்டுமொத்த இறப்பு எண்ணிக்கை 320-ஆக அதிகரித்துள்ளதுடன், அம்மாநிலத்தின் உட்கட்டமைப்பு கடுமையாக பாதித்துள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (எஸ்டிஎம்ஏ) தெரிவித்துள்ளதாவது, மேகவெடிப்பு மற்றும் கன மழையால் இமாச்சல பிரதேசம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று தேசிய நெடுஞ்சாலைகள், 1,236 மின் மாற்றிகள், 424 நீர் வழங்கல் திட்டங்கள், 819 வீதிகள் சேதமடைந்துள்ளன.

கடந்த ஜூன் 20 முதல், மாநிலத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த இறப்பு எண்ணிக்கை 320-ஆக அதிகரித்துள்ளது.

இவற்றில் மண்சரிவு, திடீர் வெள்ளம், மின்சாரம் போன்றவை தொடர்பான சம்பவங்களால் மட்டும் 166 பேர் உயிரிழந்துள்ளனர். வீதி விபத்துகளில் சிக்கி 154 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடுமையான மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் நூற்றுக்கணக்கான கிராமப்புற வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. சம்பா (253), மண்டி (206), கங்க்ரா (61) போன்ற மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. 1,000-க்கும் மேற்பட்ட மின் விநியோக மாற்றிகள் சேதமடைந்துள்ளதால் மின்சார விநியோகம் பெருமளவில் தடைபட்டுள்ளது.

424 திட்டங்களில் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், குடிநீர் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் தடைபட்டுள்ளன. சம்பா (77 திட்டங்கள்), குலு (39), மண்டி (56) மற்றும் சிம்லா (32) ஆகிய இடங்களில் அதிக பாதிப்பு பதிவாகியுள்ளது.

வீதிகளை சுத்தம் செய்யவும், மின் விநியோகத்தை மீட்டெடுக்கவும், நீர் விநியோக அமைப்புகளை சரிசெய்யவும் நிர்வாகம் பல குழுக்களை நியமித்துள்ளது. இவ்வாறு எஸ்டிஎம்ஏ தெரிவித்துள்ளது.

அத்துடன், உத்தராகண்டில் பெய்த கனமழை காரணமாக பத்ரிநாத் நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

பீஜிங்

# “பயங்கரவாதம் சவாலாக உள்ளது”



பயங்கரவாதம் என்பது, ஒட்டுமொத்த மனிதகுலுத்துக்கும் விடுக்கப்பட்ட சவால் என்று ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சீனாவின் துறைமுக நகரான தியான்ஜினில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) வருடாந்திர உச்சி மாநாடு இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமை (31) அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில் பிரதமர் மோடி பேசியதாவது:-

“எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பு, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவை அடிப்படையாகும். ஆனால் பயங்கரவாதமும், பிரிவினைவாதமும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே அது வேரறுக்கப்பட வேண்டும். பயங்கரவாதம் என்பது ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு மட்டுமல்ல, அனைத்து மனிதகுலத்திற்கும் எதிரான சவாலாகும்.

எந்த நாடும், எந்த சமூகமும், எந்த குடிமகனும் அதிலிருந்து தன்னை பாதுகாப்பாக கருதிக் கொள்ள முடியாது. எனவே, பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியா ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளது. கூட்டுத் தகவல் நடவடிக்கை மூலம் அல்கொய்தா மற்றும் அதனுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகளை எதிர்த்துப் போராட இந்தியா முன்முயற்சி எடுத்தது.

பயங்கரவாத இயக்கங்களுக்கு கிடைக்கும் நிதியை தடை செய்வதோடு, அதன் மூலங்களை கண்டறிந்து களையெடுத்து வருகிறோம். 4 தசாப்தங்களாக தீவிரவாத நடவடிக்கைகளால் இந்தியா பாதிக்கப்பட்டுள்ளது. சில நாடுகள் பயங்கரவாதத்திற்கு வெளிப்படையாக ஆதரவளிப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இரட்டை வேடம் போடுவதை ஏற்க முடியாது.

பயங்கரவாதத்தின் கோரமான முகத்தை பஹல்காமில் அண்மையில் இந்தியா பார்த்தது. இது இந்தியாவின் ஆன்மா மீதான தாக்குதல் மட்டுமல்ல, மனிதநேயத்தை நம்பும் ஒவ்வொரு நாட்டிற்கும் எதிரான வெளிப்படையான சவால். நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியாவிற்கு ஆதரவு தெரிவித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

மாஸ்கோ

# ரஷ்ய சிறுவர்களுக்கு இராணுவ பயிற்சி



ரஷ்யாவில் இராணுவ வீரர்கள் பற்றாக்குறையால் எதிர்கால போர்களுக்காக சிறுவர், சிறுமியருக்கு இராணுவ பயிற்சி கொடுத்து தயார் படுத்தி வருவதாக கூறப்படுகின்றது.


இதன்போது, உண்மையான துப்பாக்கிகளை கொண்டு துப்பாக்கி சுடும் பயிற்சி, கையெறி குண்டு வீசுவது ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

உக்ரைனுடன் 3 ஆண்டுகளாக போராடி வரும் ரஷ்யா இராணுவ வீரர்கள் பற்றாக்குறையால் திணறி வருகிறது. தனியார் பாதுகாப்பு படையினரும் சண்டையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். வடகொரியாவும் தனது இராணுவ வீரர்களை கொடுத்து உதவியுள்ளது.

ரஷ்யாவில் படிப்பு போன்றவற்றுக்காக வந்துள்ளவர்களும் வலுக்கட்டாயமாக இராணுவ பணிகளில் ஈடுபடுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில் எதிர்கால போர்களுக்காக இப்போதே சிறுவர் சிறுமிகளை ரஷ்யா தயார் படுத்துவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தியான்ஜின்

# “உக்ரைன் மோதலுக்கு மேற்கத்திய நாடுகளே காரணம்”



“உக்ரைன் மோதலுக்கு மேற்கத்திய நாடுகள் தான் காரணம்” என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவித்துள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் புட்டின் பேசியதாவது, உக்ரைனை நேட்டோ அமைப்பில் இணைக்க மேற்கு நாடுகள் தொடர்ந்து முயற்சிப்பது உக்ரைன் மோதலுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியபடி, இது ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு நேரடி அச்சுறுத்தலாக அமைகிறது. 2014ம் ஆண்டு உக்ரைனில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு, மேற்கத்திய நாடுகளில் தூண்டுதலின் பேரில் நடந்தது. இவ்வாறு அவர் பேசினார்.

வொஷிங்டன்:

“வரி இல்லாவிட்டால்

# அமெரிக்கா அழிக்கப்படும்”

## நீதிமன்ற தீர்ப்புக்கு ட்ரம்ப் பதிலடி



“வரிகள் இல்லாமல், நாம் ஏற்கெனவே பெற்ற டிரில்லியன் கணக்கான டொலர்கள் இல்லாவிட்டால், நமது நாடு முற்றிலுமாக அழிக்கப்படும்” என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா உட்பட உலகின் பல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, வர்த்தக பற்றாக்குறையை காரணம் காட்டி, ட்ரம்ப் அதிகமாக வரிகளை விதித்தார். ‘அமெரிக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அவசர கால அதிகாரத்தை பயன்படுத்தி, சர்வதேச நாடுகளுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் தன் இஷ்டப்படி கூடுதல் வரி விதித்தது சட்டவிரோதமானது’ என, அந்நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவை ஜனாதிபதி ட்ரம்ப் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.

அத்துடன், இந்த தீர்ப்பினை எதிர்த்து அமெரிக்க அரசு மேல்முறையீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சமூக வலைத்தளத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது,

வரிகள் இல்லாமல், நாம் ஏற்கெனவே பெற்ற டிரில்லியன் கணக்கான டொலர்கள் இல்லாவிட்டால், நமது நாடு முற்றிலுமாக அழிக்கப்படும். மேலும் நமது இராணுவ சக்தி உடனடியாக அழிக்கப்படும். தீவிர இடதுசாரி நீதிபதிகள் குழு அதைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால், ஒபாமா நியமித்த ஒரு ஜனநாயகக் கட்சிக்காரர் உண்மையில் நமது நாட்டைக் காப்பாற்ற ஓட்டளித்தார். அவரது துணிச்சலுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்றார்.

சிம்பாப்வேவுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றியது இலங்கை



சிம்பாப்வேக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இலங்கை, ஹராரேயில் ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சிம்பாப்வே, பென் கர்ரனின் 79 (95), சிகண்டர் ராசாவின் ஆட்டமிழக்காத 59 (55), கிளைவ் மடன்டேயின் 36 (36) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் துஷ்மந்த சமீர 3, அசித பெர்ணாண்டோ 2, ஜனித் லியனகே மற்றும் டில்ஷான் மதுஷங்க தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 278 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 122 (136), அணித்தலைவர் சரித் அசலங்கவின் 71 (61) ஓட்டங்களோடு 49.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் பிராட் இவான்ஸ், றிச்சர்ட் நகரவா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, எர்னெஸ்ட் மஸுகு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் நிஸங்க தெரிவானார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பிறைட்டனிடம் தோற்ற சிற்றி

## ஆர்சனலை வென்ற லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்லிங் ஹலான்ட் பெற்றதோடு, பிறைட்டன் சார்பாக ஜேம்ஸ் மில்னர், பிரஜன் க்றூடா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற ஆர்சனலுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது. லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை டொமினிக் ஸபொஸ்லாய் பெற்றிருந்தார்.

இந்நிலையில் அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-0 என்ற கோல் கணக்கில் கிறிஸ்டல் பலஸ் வென்றது.




# இணங்கிய லிவர்பூல்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான நியூகாசில் யுனைட்டெட்டின் முன்களவீரரான அலெக்ஸான்டர் இஸாக்கை கைச்சாத்திட 125 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் இணங்கியுள்ளது.

ஆறாண்டு ஒப்பந்தமொன்றில் 25 வயதான இஸாக் கைச்சாத்திடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் லிவர்பூலின் 110 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு இஸாக்கை கைச்சாத்திடும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.

கடந்த பருவகாலத்தில் 42 போட்டிகளில் 27 கோல்களை இஸாக் பெற்றிருந்தார்.



இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா:

# ஒருநாள் தொடர் இன்று ஆரம்பிக்கிறது

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது லீட்ஸில் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரானது இங்கிலாந்து சொனி பேக்கரை இங்கிலாந்து சோதித்துப் பார்ப்பதற்கான சிறந்த களமாகக் காணப்படுகிறது.

மறுபக்கமாக தென்னாபிரிக்காவும் டெவால்ட் பிறெவிஸிடமிருந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பெறுபேற்றை எதிர்பார்ப்பதுடன், லுஹான்-ட்ரீ பிறிட்டோறியஸுக்கும் வாய்ப்பு வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 02, செப்டெம்பர் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.